**Tiaano®**
Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

#48 Noothancharv. Madambakkam. Chennai – 126. India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

**"கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"**

## GOAL 2014-2015

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 6.25% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Apr. 14 : 763 Nos.
  - Up to Mar. 14 : 759 Nos.
- **Performance Apr. 14 …**
  - Turnover growth : 1.33%
  - Employment growth : 0.63%
  - 100% Attendance : 33.12%

## MANAGEMENT

- **Managing Director**
  Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  Ms. P.E. Nancy
  Mrs. J. Vanajambika Jeyakummar

## OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Disinfection Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Mandrels & Tanks
- HydroGen – HHO Generators
- Titanictrade – Portal for Exotic Metals
- – Tiaano Vidyashrm (CBSE Pattern School)




## CONGRATULATIONS

We, Tiaano congratulate our family children, who are all attained more than 80% scored in 10th and 12th during academic year 2013-14.



| Serial Number | Students Name | Employees Name | Mark Scored | Percen-tage |
|---|---|---|---|---|
| **12th Std** | | | | |
| 1 | Miss. S. Bharathi | Mr. E. Sekar | 1023 | 85 |
| **10th Std** | | | | |
| 1 | Miss. S. Sharmila | Mr. A. Sekar | 490 | 98 |
| 2 | Miss. R. Jeyasri | Mrs. R. Jayanthi | 465 | 93 |
| 3 | Miss. V. Bhavani | Mr. Vijaya Kumar & Mrs. Raja Kumari | 452 | 90 |
| 4 | Miss. S. Abitha | Mr. E. Sekar | 445 | 89 |
| 5 | Master. B. Bala Vignesh | Mr. V. Babu | 402 | 80 |

### ஒற்றுமை!

ஒரு செல்வந்தருக்கு நான்கு பிள்ளைகள் இருந்தனர். நால்வருக்கும் எப்போதும் சண்டைதான். அந்த செல்வந்தர் பிள்ளைகளின் வழக்கை தீர்த்து, சமாளித்து சோர்ந்துபோனார். அவர் தன் பிள்ளைகளுக்கு எத்தனையோ புத்தி சொல்லியும் எல்லாம் வியர்த்தமாயின.

ஒரு நாள் நால்வரையும் அழைத்தார் தந்தை, ஒரு சிறு கள்ளிக்கட்டையை காண்பித்தார். இதை உடைப்பவருக்கு உயர்ந்த பரிசு தருகிறேன் என்றார். ஒவ்வொருவனாய் முயற்சித்தனர் முடியவில்லை, கட்டை அவிழ்க்கச் சொன்னார். "இப்போது உடைக்க முடிகிறதா என்று பாருங்கள்!" என்றார். பையன்கள் ஆளுக்கொன்றாக எடுத்து முறித்துப்போட்டனர். பிள்ளைகளா! பார்த்தீர்களா…கூட்டாக இருந்த கள்ளிக்கட்டை எவராலும் உடைக்க முடியவில்லை. ஆனால், தனித்தனியாகப் பிரிந்த கள்ளிகள் துண்டாகிக் கிடக்கின்றன.

"நீங்கள் ஒற்றுமையாக இருந்தால் உங்களை எவராலும் வெல்லமுடியாது. அதுவே தனித்தனியே பிரிந்தால் முறிக்கப்படுவீர்கள்!" என்றார். அதுமுதல் சகோதரர்கள் ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

Compiled By : Ms. P.E. Nancy
Director – Admin

## FUNCTIONAL WISHES



**Happy Father's Day**
**15th JUNE**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 22294565 |
| | : M/s. Jeya Clinic |
| | Tel: 098408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



| | | | |
|---|---|---|---|
| **Mr. S. Samuel** | - | Admin | 03rd Jun. |
| **Mr. K. Kanthan** | - | Purchase | 05th Jun. |
| **Mr. V. Satheesh** | - | Production | 05th Jun. |
| **Mr. P. Parthasarathy** | - | Production | 05th Jun. |
| **Mr. P. Ravi** | - | Coating | 06th Jun. |
| **Mr. S. Sri Ganesh** | - | Production | 06th Jun. |
| **Mr.A.Immanuel Thamburaj** | - | Production | 06th Jun. |
| **Mrs. V. Rajakumari** | - | Admin | 07th Jun. |
| **Mr. G. Vignesh** | - | Q.C | 08th Jun. |
| **Mr. A. Sekar** | - | Production | 09th Jun. |
| **Mr. G. Muthu** | - | Production | 10th Jun. |
| **Mr. C. Babu** | - | Finance | 10th Jun. |
| **Mr. R. Narayanan** | - | M.S.E | 11th Jun. |
| **Mr. M. Sreetharan** | - | Production | 12th Jun. |
| **Mrs. T. Jayalatha** | - | Finance | 15th Jun. |
| **Mr. R. Benjamin Michael** | - | Production | 19th Jun. |
| **Mrs. S. Sahaya Pani Shiny** | - | Project | 20th Jun. |
| **Mr. G. Jeevanantham** | - | Coating | 20th Jun. |
| **Mr. A. Manikantan** | - | Coating | 20th Jun. |
| **Mr. B. Shankar Babu** | - | Purchase | 20th Jun. |
| **Mr. G. Gnanasekar** | - | Production | 22nd Jun. |
| **Mr. T. Rajakumaran** | - | Coating | 22nd Jun. |
| **Mr. C. Puhazhanthi** | - | M.S.E | 23th Jun. |
| **Mr. S. Ranjith Kumar** | - | Project | 25th Jun. |
| **Mr. P. Gopalakrishnan** | - | Production | 26th Jun. |

**Best Wishes from Tiaano Employees**

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

அந்தத் தீவில்தான் மகிழ்ச்சி, சோகம், அழகு, செல்வம், அன்பு ஆகிய உணர்வுகள் குடியிருந்தன. ஒருநாள், இந்தத் தீவு மூழ்கிவிடும் என்று கருதி, ஒவ்வோர் உணர்வாக படகு செய்து கொண்டு புறப்பட்டன. அன்புக்கு மட்டும் படகு இல்லை.

"செல்வமே! என்னை ஏற்றி கொள்வாயா?" அன்பு கேட்டது "என் படகு நிறைய தங்கமும் வைரமும் இருக்கிறது உனக்கு இடமில்லை" செல்வம் சென்றது.

"அழகே! என்னை ஏற்றி கொள்வாயா?" "நீ ஈரமாய் இருக்கிறாய் என் படகின் அழகு போய்விடும்" அழகு சென்றது.

"மகிழ்ச்சியே! என்னை ஏற்றிக் கொள்வாயா?" மகிழ்ச்சியின் காதுகளில் அந்தக் குரல் விழவில்லையா.

ஒரு படகு அன்புக்கு அருகே வந்து நின்றது "ஏறிக்கொள்" ஒரு முதிர்ந்த குரல் சொன்னது கரையோரம் இறங்கிக் கொண்டபோது அன்பு கேட்டது "யார் நீங்கள்?"

பதில் வந்தது. "நான் தான் காலம்! அன்பின் முக்கியத்துவத்தைக் காலம்தான் அறியும்.

—கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## இனி வரும் காலத்தில் என் சுயரூபம் அறிவாய்

உலகைப் படைத்த ஆண்டவன் நீரினில் உயிர்கள் வாழும், நீரின்றி உயிர்கள் வாழ்தல் அரிது என்பதால் தான் பெரும்பகுதி நீராகவும், எஞ்சிய பகுதியை நிலமாகவும் படைத்தான். ஏன் வரலாற்றுச் சுவடுகளை நாம் புரட்டிப்பார்த்தால் மன்னர்கள் ஆண்ட காலத்தில்கூட தினமும் மன்னன் அமைச்சர்களை நோக்கி கேட்கும் முதல் கேள்வியாக மாதம் "மும்மாரி பொழிகின்றதா? மக்கள் நலமுடன் வாழ்கின்றார்களா?" என்றே கேட்டதாக அறிகின்றோம்.

இதற்கும் மேலாக நம் வீட்டிற்கு வரும் உறவினர்களுக்கு முதல் முறையாக கொடுப்பது ஒரு செம்பு தண்ணீர்தான், அந்த ஒரு செம்பு தண்ணீரே உறவினர்களுடன் பேச்சுவார்த்தையை தொடங்கி வைக்கின்றது. மேலும் உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 22ம் தேதி உலக தண்ணீர் தினம் கொண்டாடப்படுகிறது. இதிலிருந்து "மாரி" என்னும் மழை எந்த அளவுக்கு மக்கள் வாழ்வதற்கு முக்கியம் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும்.

### இன்றைய நிலை என்ன

இன்றைய உலகில் தவிச்ச வாய்க்குத் தண்ணீர் என்ற நிலை மாறி, தண்ணீரைக் கூட பணம் கொடுத்துதான் வாங்கவேண்டி இருக்கிறது. அப்படியே வாங்கினாலும், குடிக்கும் தண்ணீர் சுகாதாரமாக இருக்கிறதா என்றால், அதுவும் சந்தேகம்தான். மேலும் தண்ணீருக்காக ஒரே தேசத்தின் அண்டை மாநிலங்களுக்குள் ஒற்றுமை குலைந்து சகோதர மனப்பான்மையுடன் வாழ்ந்த மக்கள் ஒருவருக்கு எதிராக மற்றவர் போராட்டம் என்ற போர்க்கொடி உயர்த்தி கலவரங்கள் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆண்டவன் அனைவருக்கும் பொதுவாய் படைத்த ஆறுகள் நாட்டு மக்கள் வாழ்வை வளமாக்குவதற்கு பதிலாக நாட்டு மக்கள் சண்டைக்கும், சச்சரவுக்கும் காரணமாகி இருக்கும் அவலநிலை.

Contd....3

## தெரிந்து கொள்வோம்

**அன்று** : வீட்டு தேடி உறவுகள் வந்தது.
**இன்று** : உறவை தேடி இணையம் செல்ல வேண்டி இருக்கு !!!




### மரங்களின் மகத்துவம்...!

ஒரு மனிதன் ஒரு நாளைக்கு மூன்று சிலிண்டர்கள் அளவு ஆக்ஸிஜனை சுவாசிக்கிறான். ஒரு ஆக்ஸிஜன் சிலிண்டரின் விலை 700 ரூபாய், மூன்று சிலிண்டரின் விலை 2100 ரூபாய், ஒரு வருடத்திற்கு 7,66,500 ரூபாய்க்கு மேல் போகிறது.

ஒரு மனிதனின் சராசரி ஆயுள் காலம் 65 வருடம் என்றால் 5 கோடி ரூபாய்க்கு மேல் எட்டுகிறது. இவ்வளவு விலையுயர்ந்த, மதிப்பு மிகுந்த சுவாசக்காற்றை நமக்காக இலவசமாக மரங்கள் தருகிறது.

அப்படி என்றால் நாம் மரங்களுக்கு எந்த அளவிற்கு மரியாதை கொடுக்க வேண்டும்., மரங்கள், இயற்கை மனிதனுக்கு தந்த பொக்கிஷம்.

Compiled By : Mrs. C. Bavani
Administration

## GODS are also I.T. Engineers



BRAHMA - System Installer

VISNU - System Supporter

SHIVA - System Programmer

NAARAD - Data Transfer

YAMA - Delete

Compiled By : Mr. D. S. Anish
Facilitation

இதற்கெல்லாம் பருவமழை பெய்த்து விட்டது, ஆறு வற்றி விட்டது, ஏரி வறண்டு விட்டது என்று ஒரு வரியில் பதில் கூறிவிட முடியுமா? முடியாது. படைப்பின் சுழற்சி புவி திரண்ட தண்ணீர் ஆதவனின் வெப்பத்தால் ஆவியாகி, வான் அடைந்து, மேகங்களாய் திரண்டு, காற்றினில் குளிர்ந்து பெருமழையாய் பூமிக்கே திரும்ப கிடைத்தலே படைப்பின் சுழற்சி. ஆனால் அவ்வாறு பொழிகின்ற மழை நீரை பூமி உள்வாங்கி தேக்கினால் அன்றோ நீர்வளம் பூமியில் நிலைத்து நிற்கும்?

### எதிர்கால அபாயம்

மக்கள் தொகை பெருக்கத்தால் நீரின் தேவை நாளுக்குநாள் பெருகிக் கொண்டே செல்வதால், நிலத்தடி நீரினை பெருமளவில் நாம் உறிஞ்சி எடுத்து வருவதால் கடல்நீர் உட்புகுந்து நல்ல நீரை உபயோகிக்க இயலாதவண்ணம் செய்யும் அபாயம் தொடர்கிறது என்று நீர்வள அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்தவண்ணம் உள்ளனர். எனவே வருங்காலத்தில் குடிக்க நீரின்றி மக்கள் தவித்து வாழும் நிலை ஏற்பட வாய்ப்புண்டு.

### மீளும் வழி யாது?

நாம் இனி வரும் காலத்தில் நிலத்தடி நீரை பாதுகாக்கும் முயற்சியில் இறங்காவிடில் நம் எதிர்காலம் கேள்விக்குறியாய் மாறும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. தற்போது அரசாங்கமும் தண்ணீர் பஞ்சத்தை போக்கிட மழை நீர் சேமிப்பு வழிமுறைகளை அறிவித்துள்ளது. இதுவரை பெய்த மழைநீரை சரியாக சேமிக்காமல் கடல் நீரில் கலந்திட செய்து வீணாக்கிய காரணத்தால் ஏற்பட்ட இந்த அவல நிலையை இனி மழைநீர் சேமிப்பு முறைகளை பின்பற்றி நிலத்தடி நீரின்வளத்தை பெருக்குவதன் மூலம் நாம் சரி செய்ய முடியும்.

"**வான் நோக்கி வாழும் உலகு**" என்றானே வள்ளுவன் அதன் உண்மை நிலை உணர்ந்து வான் தரும் கொடையாம் மழையை, மழைநீரை சிறப்பாக தேக்கி, பாதுகாத்து வாழ்வோமேயானால் நீரின்றி கண்ணீரோடு வாழும் நிலை மாறிவிடும் என்பது திண்ணம்!

நண்பனே என்னை நீ வீணாக்காதே, ஏனெனில் நீ கவலைப்படும் போது உன் கண்களில் இருந்து விழும் ஒரு சொட்டு கண்ணீர் கூட நானதான்!

Compiled By : Mr. K. Manivannan
Fib Tec

### நம்பித்தான் ஆகவேண்டும்
### 5S (தொடர்ச்சி XXIX)

### ஜிட்

'செய்ரி ஆடிட்' ஆய்வின் போது பொதுவாக கேட்கப்படும் கேள்விகள் என்னென்ன என்று ஒரு சுருக்கமான பட்டியல் இங்கே தரப்பட்டுள்ளது.

மதிப்பெண், பரிசுக்காக இல்லாவிட்டாலும் நாம் எந்த அளவுக்கு 'செய்ரி'யைச் சரியாகப் புரிந்துகொண்டு செயல்படுத்தியிருக்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்வதற்கு இந்த கேள்விகள் மிகவும் உதவியாக இருக்கும்.

1. ஒவ்வொரு பணியிடம் / அறையிலும், அங்கே நடைபெறும் பணிக்கு அவசியமான பொருள்கள் மட்டுமே வைக்கப்பட்டுள்ளனவா?

Contd....4

## கவிதைகள்

### பாராட்டு

உற்சாகம் உள்ளவனை
எதிர்ப்பு தடை செய்வதில்லை
மாறாக அவனுக்கு அதுமேலும்
ஊக்கத்தை ஊட்டுகிறது!

Compiled By : Mr. M. Siva Kumar
Marketing

### முயற்சி

மூச்சு விட்டு
கொண்டிருப்பவன் எல்லாம்
மனிதன் இல்லை...
அந்த மூச்சிருக்கும்
வரை முயற்சி
செய்து கொண்டிருப்பவனே
மனிதன்...!!!

Compiled By : Mrs. A. Nirmala
Finance

### தெய்வம்

கலியுகத்தில் தெய்வங்கள்
கண்ணுக்குத் தெரிவதில்லையாம்
ஞானிகள் சொல்கிறார்கள்...
தாயே!
நீ என்னுடனேயே
இருப்பது தெரியாமல்.

Compiled By : Mrs. M. Sudha
Fib Tec

## சிந்தனைக்கு

உயர்வானம் கண்டேன் — என்
சிந்தனையை உயர்வென கொண்டேன்
விரிவானம் கண்டேன் — எல்லோரிடமும்
பழகும் தோழமை கொண்டேன்
தெளிவானம் கண்டேன் — வாழ்வின்
இலக்கினை தெளிவென கொண்டேன்
இருள்வானம் கண்டேன் — துன்பமும்
இணைந்ததுதான் வாழ்க்கை என்ற
எதார்த்தமும் கொண்டேன்
கருமேகங்களை கிழித்திடும் ஒளிவானம்
கண்டேன் — முயற்சித்தால்
வெற்றியுண்டென புதிய நம்பிக்கை
கொண்டேன்
வானம் கண்டேன் — என்றும் மகிழ்ந்திடும்
வாழ்வினை கொண்டேன்.

Compiled By : Mr. K. Manivannan
Fib Tec

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

2. இந்தப் பொருள்கள் இட நெருக்கடி இல்லாதபடி ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ளனவா?
3. அடிக்கடிப் பயன்படும்பொருள்களும், எதைத் தேடினாலும் கைக்கெட்டும் தூரத்தில் சில விநாடிகளுக்குள் கிடைக்கிறதா?
4. எப்போதாவது பயன்படுகிற பொருள்கள், வேறு இடங்களில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனவா? அந்த ‘வேறு இடங்கள்’ எவை எவை என்று எல்லாருக்கும் தெரிந்திருக்கிறதா?
5. அவசியமில்லாத, வீணான (சிவப்பு ரிப்பன்) பொருள்களை இடத்தை அடைக்காதபடி நிரந்தரமாக நீக்கிவிட்டோமா?
6. பலரும் அடிக்கடி பயன்படுத்துகிற / பகிர்ந்து கொள்கிற பொதுவான கருவிகள், உபகரணங்கள் தனியிடத்தில் வைக்கப்பட்டுள்ளனவா?
7. குப்பைத் தொட்டிகள் அடிக்கடி காலி செய்யப்படுகின்றனவா? மட்கும் குப்பைகள், மட்காத குப்பைகள் என்று தெளிவாகப் பிரித்து வைத்திருக்கிறோமா?
8. ரசாயனக் கழிவுகள் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு இல்லாதபடி உரிய முறையில் அழிக்கப்படுகின்றனவா?
9. தொழிலாளர்களின் தனிப்பட்ட பொருள்கள் (டிபன் பாக்ஸ், தினத்தந்தி, விகடன், குமுதம், இன்னபிற) பணியிடங்களை பாதிக்காதபடி ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளனவா?
10. தினசரி நடவடிக்கைகள் வழிமுறைகளில், அவசியமற்ற நேரத்தை வீணடிக்கும் இடைச்செருகல்கள் எதுவும் இல்லை தானே?

இது போன்ற ஆய்வுகள், நமது ‘செய்ரி’ செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கு மிகவும் பயன்படுகின்றன. குறிப்பாக, தொழிற்சாலைகளை விரிவுபடுத்தவேண்டிய அவசியம் ஏற்படும் போது, அவற்றைக் கண்டிப்பாக ஒரு முழுமையான ‘செய்ரி ஆடிட்’ செய்யவேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

தொடரும்

## ELECTRO CHLORINATOR

